**கவனிக்க.-** *2010.04.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1652 - 2010 අප්‍රේල් 30 වැනි සිකුරාදා - 2010.04.30**

*1652 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 794 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## உள்ளூராட்சித் திணைக்களம் - மத்திய மாகாணம்

மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களில் அரச நியமனங்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்த்தல்

13.11.2009 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் 'பகுதி IV (அ) - மாகாண சபை' 1784 ஆம் இலக்கத்தில் மேற்குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி கீழ்க்காணும் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன். மேலும் ஏற்கனவே விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகள் மீண்டும் அனுப்பத் தேவையில்லை.

விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 31.05.2010.

உபாலி அலஹகோன்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
மத்திய மாகாணம்,
28.03.2010.

4-609/1

---

## உள்ளூராட்சித் திணைக்களம் - மத்திய மாகாணம்

மத்திய மாகாண அரச சேவையில் உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2009

மத்திய மாகாணத்தில் காணப்படும் பின்வரும் உள்ளூராட்சி நிறுவனங்களில் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்த வெற்றிடங்களுக்கு மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிலுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| * வருமான பரிசோதகர் | - | தரம் III |
| * நூலகர் | - | தரம் III |
| * முன்பள்ளி கண்காணிப்பாளர் | - | தரம் II |

02. மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கையை தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

03. **அடிப்படை தகுதிகள்** :

(1) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 2010.05.31 ஆந் திகதியன்று விண்ணப்பதாரர்கள் வயது 18 வருடத்திற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(மத்திய மாகாண அரச சேவை உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேற்படி வயது எல்லை ஏற்புடையதாகாது.)

(3) விண்ணப்பதாரர்கள் மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவிலுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். (விண்ணப்ப தாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதிக்கு ஆகக்கிட்டிய 03 வருட காலத்தின் நிரந்தர வதிவை நேர்முகப் பரீட்சையின்போது வாக்காளர் இடாப்பின் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.)

4. **சம்பள அளவுத்திட்டம்/கல்வித் தகுதிகள், வேறு தகுதிகள்/ ஆட்சேர்ப்பு முறை** :

01. **நூலகர் - தரம் III**

01.01 **சம்பள அளவுத்திட்டம்** :-
(6/2006 (iv) - எம்என் 03 இன்படி)
ரூபா 15,005-4 × 180 - 6 × 240 -11×320 - ரூபா 27,885 ஆகும்.

01.02 **கல்வித் தகுதிகளும் பிற தகுதிகளும்** :

01.02.01 **திறந்த ஆட்சேர்ப்பு** :-

(அ) க. பொ. த. (சா/தரம்) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி

உட்பட

எண்கணிதம்/அடிப்படை கணிதம்/தூய கணிதம்/ கணிதம் ஆகிய பாடங்களில் ஒன்று சகிதம் பிற 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமாகும். இதில் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உ/தரம்) பரீட்சையில் ஏதாவது 03 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் மேலே (அ), (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகள்

உட்பட

(இ) இலங்கை நூலக சங்கத்தின் முதலாவது பரீட்சை யில்,

அல்லது

(ஈ) இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக நூலகவியல் சான்றிதழ் பத்திர பரீட்சையில் 01 ஆம் பிரிவில் சித்தி பெற்று தொழில் தகைமை பெற்றிருத்தல்.

01.02.02 **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு** :-

(அ) நூலக உதவியாளர்/ பணியாளர் ஆக 1997.08.01 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு சேவைக்கு சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குரிய தகுதிகள் :-

* உள்ளூராட்சி நிறுவன நூலகம் ஒன்றில் பொறுப்பாக அங்கு நூலக உதவியாளர்/

பணியாளர் பதவியில் 10 வருடங்களுக்கு குறையாதளவு காலம் தொடர்ச்சியான சேவையை கொண்டிருத்தல்.

அத்துடன்,

* சிங்களம்/தமிழ் மொழி மற்றும் இரு பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் கணிதம்/எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் அடங்கலாக 06 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதர (சா/தரம்) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

* ஆங்கிலத்தில் பொதுவான அறிவை கொண்டிருத்தல்.

(ஆ) நூலக உதவியாளராக / பணியாளராக 1997.08.02 ஆந் திகதியன்றோ அத்திகதிக்கு பின்போ சேவையில் சேர்ந்த விண்ணப்ப தாரர்களுக்கு வேண்டப்படும் தகுதிகளாவன :-

மத்திய மாகாண அரச சேவையில் நூலக உதவியாளராக/ பணியாளராக 10 வருட தொடர்ச்சியான நிரந்தர சேவையையும் மேல் 01.02.01 இல் (அ), (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளையும் கொண்டவர்களாக இருத்தல்.

01.03 **ஆட்சேர்ப்பு முறை** :- காணப்படும் வெற்றிடங்களில் 75% வீதம் திறந்த போட்டிப் பரீட்சை பெறுபேற்றுக்கு ஏற்பவும், 25% வீதம் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேற்றிற்கு ஏற்பவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் தகுதிபெறும் விண்ணப்பதாரர்களின் முன்னிலை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்களின் அடிப்படை கல்வி தகுதிகளும் தொழில் தகுதிகளும் இங்கு உறுதி செய்யப்படும். பின்பு அரச கொள்கைகள், நியதிகள் பின்பற்றி வெற்றிடங்கள் நிரப்பப்படும். இந்த நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நியமனம் வழங்கும் இறுதி நடவடிக்கையில் முன்னிலை அடிப்படையில் சமபுள்ளி பெற்ற பல விண்ணப்பதாரர்கள் இருக்கும்போது, அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, அவர்களின் கல்வி மற்றும் தொழில் தகைமைகளை பரிசீலித்து அவற்றில் ஆகக்கூடிய தகுதியுடையவர் தெரிவு செய்யப்படுவார்.

**எழுத்துமூல பரீட்சைக்குரிய பாடவிதானம்.**- திறந்த, வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை கீழ்வரும் வினாப் பத்திரங்களை கொண்டு நடாத்தப்படும் :-

1. பொது அறிவு (காலம் : 01 மணி) - 100 புள்ளிகள்
2. நூலகவியல் பற்றிய அறிவு (காலம் : 02 மணி) - 100 புள்ளிகள்

பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

02. **வருமான பரிசோதகர் சேவை - தரம் III :**

02.01 **சம்பள அளவுத்திட்டம் :**

(பொ. நி.சு. 6/ 2006 (IV) MN1 இன் சம்பள அளவுத்திட்டம்) வருடாந்த இணைந்த சம்பளம் ரூபா 1,57,440-1,740 × 10 - ரூபா 1,74,840 ஆகும்.

02.02 **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

02.02.01 **திறந்த ஆட்சேர்ப்பு :**

(1) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியும் ஆங்கில பாடத்தில் சித்தியும் அடங்கலாக 06 பாடங்களில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கல்வி பொதுத் தராதர பத்திர பரீட்சையில்/தேசிய கல்வி பொது தராதர பத்திர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

(2) கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கணக்கியல், வணிகம் மற்றும் நிதி, பொருளாதாரம், பிரயோக கணிதம், இணைந்த கணிதம், தூய கணிதம் ஆகிய இருபாடங்களில் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

02.02.02 **வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்புமுறை :**

(1) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் ஆங்கில பாடத்தில் சித்தியும் அடங்கலாக 06 பாடங்களில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கல்வி பொதுத் தராதர பத்திர பரீட்சையில்/ தேசிய கல்வி பொது தராதர பத்திர பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு ஐந்து வருட கால திருப்தியான சேவையைப் பூர்த்தி செய்துள்ள கீழ்வரும் பதவிகளில் ஒன்றில் நிரந்தர நியமனம் வகிக்கும் பணியாளராக இருத்தல் :-

* வியாபார நிலைய கண்காணிப்பாளர்
* சந்தை கண்காணிப்பாளர்
* வருமான ஓவசியர்
* பூந்தோட்ட பொறுப்பாளர்/ கண்காணிப்பாளர்
* விளையாட்டு மைதான பொறுப்பாளர்/ கண்காணிப்பாளர்
* வாரச் சந்தை பொறுப்பாளர்/கண்காணிப்பாளர்

02.03 **ஆட்சேர்ப்பு முறை.**- காணப்படும் வெற்றிடங்களில் 70% ஐ திறந்த போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்பவும் 30% ஐ வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்பவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின்படி முன்னிலைக்கு ஏற்ப விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகுதிகள் உறுதி செய்யப்படும். பின்பு அரச கொள்கைகளுக்கும் நியதிகளுக்கும் ஏற்ப வெற்றிடங்கள் நிரப்பப்படும். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. நியமனம் வழங்கும் சந்தர்ப்பத்தில் இறுதியாக முன்னிலை பெறும் விண்ணப்பதாரர்களில் சமமான புள்ளிகளையுடையவர்கள் பலர் காணப்படும் பட்சத்தில் அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப் பட்டு அவர்களில் கல்வி, தொழில் தகுதிகளில் அதியுயர் தகுதி பெற்றவர் தெரிவு செய்யப்படுவார்.

02.03.01 **பாடவிதானம்.**- பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

02.03.01.01 திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் பாடவிதானம்.- கீழ்வரும் வினாத்தாள்களுடன் கூடிய திறந்த போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப் படும்.

| | | |
|---|---|---|
| மொழித்திறன் | (காலம் : 1 1/2 மணி) | 100 புள்ளிகள் |
| உளச்சார்பு | (காலம் : 01 மணி) | 100 புள்ளிகள் |

பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

02.03.01.02 வரையறுக்கப்பட்ட எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் பாடவிதானம்.- வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை கீழ்வரும் வினாப்பத்திரங்களை கொண்டு நடாத்தப்படும் :-

| | | |
|---|---|---|
| நுண்ணறிவு | (பரீட்சை காலம் : 1 மணி) | 100 புள்ளி |
| பொது அறிவு | (பரீட்சை காலம் : 1 1/2 மணி) | 100 புள்ளி |

03. **முன்பள்ளி கண்காணிப்பாளர் - தரம் II**

03.01 **சம்பள அளவுத்திட்டம்** : (பொ.நி.சு. 6/ 2006 (IV) MN1 இன் சம்பள அளவுத்திட்டம்) வருடாந்த இணைந்த சம்பளம் ரூபா 1,57,440-1,740 × 10 - ரூபா 1,74,840 ஆகும்.

03.02 **கல்வி மற்றும் பிற தகைமைகள்** :

(அ) இரு அமர்வுகளுக்கு மேற்படாத கணிதம்/ எண் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி/இலக்கியம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 03 பாடங்களில் திறமைச்சித்தி சகிதம் 06 பாடங்களில் க. பொ. த. (சா/தரம்) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பத்திர பரீட்சையில் அல்லது தேசிய பொதுச் சான்றிதழ் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- மேற்படி பரீட்சையில் சித்திரம்/ சங்கீதம்/ நடனம் ஆகிய அழகியற் பாடங்களில் சித்தியடைந்திருப்பின், அது விசேட தகுதியாக கொள்ளப்படும்.

அத்துடன்

(ஆ) முன்பள்ளி கல்வி தொடர்பாக பி. எம். ஐ. சீ. எச். நிறுவனத்தால் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் அல்லது மியூசியஸ் முன் பள்ளி பரிபாலம் பற்றிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் வெளிவாரி சேவை சபை மூலம் வழங்கப்படும் முன்பள்ளி கல்வி பற்றிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது பிற ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச நிறுவனமொன்றின் மூலம் வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ்.

03.03 **ஆட்சேர்ப்பு முறை**.- இந்த ஆட்சேர்ப்பு எழுத்துமூல பரீட்சை பெறுபேறுகளின் முன்னிலைக்கு ஏற்ப செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கு ஏற்ப முன்னிலை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் தகுதிகள் உறுதி செய்து கொண்டு அரச கொள்கைகள், நியதிகளுக்கு ஏற்ப வெற்றிடங்கள் நிரப்பப்படும். பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நியமனங்கள் வழங்கல் நடவடிக்கையின் போது, நியமனம் வழங்குவதற்குரிய இறுதி முன்னிலைப் படுத்தலில் சமமான புள்ளிகளைக் கொண்ட பலர் இருக்கும் வேளையில், நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் கல்வி மற்றும் தொழிற் தகுதிகளை பரிசீலித்து, அதன்படி அதி உயர் தகுதி கொண்டுள்ளவர் தெரிவு செய்யப்படுவார்.

**எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பாடவிதானம்**.- கீழ்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டதொரு திறந்த பரீட்சை நடாத்தப்படும்.

| | | |
|---|---|---|
| நுண்ணறிவு | (பரீட்சை காலம் : 1 மணி) | 100 புள்ளிகள் |
| முன்பள்ளி நிர்வாகம் | (பரீட்சை காலம் : 1 1/2 மணி) | 100 புள்ளிகள் |

பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**குறிப்பு**.- பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.-

(1) இந்த அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஏற்ப, ஏ4 (21 செ. மீ. × 29 செ. மீ.) அளவுடைய தாளில் விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும்.

(முதலாவது பக்கத்தில் இல. 01 தொடக்கம் 08 வரையும் இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 09 தொடக்கம் 14 வரையும் எஞ்சியவை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவம் தயாரித்தல் வேண்டும்.)

(2) இந்த விண்ணப்பத்தை சரியாக நிரப்பி : 2010.05.31 ஆந் திகதிக்கு முன்பு "உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், த. பெ. 126, கண்டி" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரர் தமது திணைக்கள தலைவரினூடாக தத்தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை விண்ணப்பம் அனுப்பும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

(3) உரிய மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத பூரணமற்ற விண்ணப்பங்கள், முடிவு திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்புக்குரிய அடிப்படை தகுதிகளை கொண்டிராத விண்ணப்பங்கள் எவ்வித முன் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தபாலில் தொலைந்து போதல், காலதாமதம் ஏற்படல் போன்ற முறைப்பாடுகளுக்கு இந்த உள்ளூராட்சி திணைக்களம் பொறுப்புக் கூறாது.

(4) விண்ணப்பப் படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்திய ஆணையாளர் ஒருவரினால்/ பகிரங்க நொத்தாரிஸ் ஒருவரினால்/

முப்படையில் அதிகார வலுவுடைய அதிகாரி ஒருவரினால்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி ஒருவரினால்/ வருடம் 230,700 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக சம்பளம் பெறும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு தவிர்ந்த எந்தவொரு எழுத்தாவணமோ பிரதியோ விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் கூடாது.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 600 ரூபாவாகும். இதனை மத்திய மாகாண சபை "வருமான தலைப்பு 20-03-20-39" இல் வரவாகும் வகையில் உரிய பிரதேச செயலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். இது விடயமாக பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை தவிர்ந்த பிற நிறுவனம் ஒன்றிற்கு பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எந்தவொரு காரணம் காட்டப்படினும் செலுத்திய பணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7. **சேவை ஒழுங்கு விதிகளும் நியதிகளும்**.- (1) பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது.

(2) தாபனக் கோவையின் விதிகள், நிதிப் பிரமாணங்கள், மாகாண சபை நிதிப் பிரமாணங்கள் (விதிகள்), திணைக்கள கட்டளைகள் மற்றும் காலத்திற்கு காலம் மத்திய அரசு மற்றும் மாகாண சபை வெளியிடும் கட்டளைகள் ஆகிய அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர் குற்றவியல் சட்டப்படி நீதிமன்ற மொன்றினால் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

(4) நல்ல பழக்கவழக்கமுடையவராகவும் தேக ஆரோக்கியமுடைய வராகவும் இருத்தல் வேண்டும்.

8. **பரீட்சை நிலையம்**.- இந்த பரீட்சையை கண்டி நகரத்தில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆரம்பிக்கும் முதல் நாளிலே தத்தமது கையொப்பங்கள் உறுதி செய்யப்பட்ட பரீட்சை நுழைவுச் சீட்டை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

9. **பரீட்சையை நடாத்துதல்**.- இலங்கை பரீட்சை திணைக்களம் அல்லது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு.

10. இந்த பரீட்சையை பிற்போடுதல், இரத்துச் செய்தல், இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிராத விடயங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்குரியது.

**விசேட குறிப்பு**.- பொ. நி. சு. 07/2007 இன் ஏற்பாடுகள் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து மாகாண அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்து கொள்ளப்படும் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் தாம் அரச சேவைக்கு சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழியில், தாம் சேவைக்கு உட்சேர்ந்து 05 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும். அரச கரும மொழித் திணைக்களம் நடாத்தும் ஆரம்பநிலை தேர்ச்சிமட்ட மொழிப் பாடநெறி பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும். (தேர்ச்சி பெற வேண்டிய மட்டம் 03 ஆம் காண்டமாகும்) நியமனத் திகதியிலிருந்து 05 வருடத்திற்குள் உரிய இரண்டாம் மொழி தேர்ச்சி பெற்றுக்கொள்ளாதிருக்கும் உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றம் மொழித் தேர்ச்சி தகுதி பெறும் வரை இடை நிறுத்தப்படும்.

உபாலி அலஹகோன்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
மத்திய மாகாணம்.

உள்ளூராட்சி திணைக்களம்,
மத்திய மாகாணம்,
2010.03.28.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மத்திய மாகாண அரச சேவையில் ............................................
பதவிக்கான விண்ணப்பம்**

☐
(அலுவலக பிரயோகத்திற்கு)

நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் : ☐
(சிங்களம் - 2, தமிழ் - 3, ஆங்கிலம் - 4)
(உரிய இலக்கத்தை சதுர கூட்டில் இடவும்)
(நீங்கள் குறிப்பிடும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

நீங்கள் தோற்றும் பரீட்சை :
மட்டுப்படுத்தப்பட்ட ☐ திறந்த ☐
(சரியான சதுர கூட்டில் ✓ குறியீட்டை இடவும்)

1. (i) முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டவாறு முதலெழுத்துக்கள் சகிதம் பெயர்(ஆங்கில கெப்பிடல் (தனி எழுத்து) எழுத்தில் குறிப்பிடுக):----.
(உதாரணம் : SILVA, A.B.) :----.

(ii) முதலெழுத்துக்களை பின்னால் குறிப்பிட்டவாறு முதலெழுத்துக்கள் சகிதம் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. முதலலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
(சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி :----.

4. (i) பரீட்சை நுழைவுசீட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் (தனி எழுத்து) எழுத்தில்:----.

(ii) பரீட்சை நுழைவு சீட்டு அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில்/ தமிழில்):----.

5. ஆணா/பெண்ணா ? ☐
பெண்-1, ஆண்-0
(உரிய இலக்கத்தை சதுர கூட்டில் இடவும்)

6. விவாகமானவர்/விவாகமாகாதவர் ☐
(விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2)
(உரிய இலக்கத்தை சதுர கூட்டில் இடவும்)

7. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

9. இலங்கை பிரசையாக இருப்பது பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? :----.

(i) விண்ணப்பதாரரின் நிரந்தர பதிவு மாவட்டம் :----.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(iii) கிராம அலுவலர் பிரிவு :----.
(iv) பதிவிலுள்ள காலம் :----- இருந்து ----- வரை
வருடங்கள் :----, மாதங்கள் :----.

10. கல்வித் தொழில் தகைமைகள் :-

(i) க. பொ. த. (சா/தரம்) பரீட்சை:-

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| 1. .............. | .............. | 5. .............. | .............. |
| 2. .............. | .............. | 6. .............. | .............. |
| 3. .............. | .............. | 7. .............. | .............. |
| 4. .............. | .............. | 8. .............. | .............. |

(ii) க. பொ. த. (உ/தரம்) பரீட்சை:-

| பாடங்கள் | சித்தி |
|---|---|
| 1. .............. | .............. |
| 2. .............. | .............. |
| 3. .............. | .............. |
| 4. .............. | .............. |

(iii) வேறு தகைமைகள்:-
கல்வி :- ..................................................................
தொழில்:- ..................................................................

11. விண்ணப்பதாரர் செய்யும் தொழில் பற்றிய விபரம் :- (தொடர்புடையதாயின் மட்டும்)

| திணைக்களம்/ நிறுவனம் | வகிக்கும் பதவி | காலம் | | வருடச் சம்பளம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |
| | | | | |

12. பரீட்சைக் கட்டணம் ரூபா 600 செலுத்திய விபரம் :-
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இல. :----.
(ii) திகதி :----.
(iii) பற்றுச்சீட்டு பெற்றுக்கொண்ட பிரதேச செயலகம் :----.

| பற்றுச்சீட்டை நன்றாக (கழறாது) ஒட்டவும். (பற்றுச்சீட்டு புகைப்படப் பிரதியை கைவசம் வைத்திருப்பது நல்லது) |
|---|

13. (i) நீர் கடனாளியாக இருப்பின் கடன்தொகை எவ்வளவு?:----.
(ii) நீர் ஏதாவது ஒரு குற்றத்திற்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றிருக்கின்றீரா? :----.
அவ்வாறாயின் விபரம் :----.

14. இந்த விண்ணப்பப் படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள், எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதியிட்டு கூறுகின்றேன். இந்த பரீட்சை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் தவறான தகவல் வழங்கப்பட்டிருப்பின் அதுபற்றி பரீட்சைக்கு முன்பு அல்லது பின்பு கண்டுபிடிக்கப்பட்டால், எனது பரீட்சார்த்தித்தன்மை இரத்துச் செய்யப்படலாம் என்பதையும் பதவிக்கு தெரிவு செய்தபின்பு தவறு கண்டுபிடிக்கப்பட்டால் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன். மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் பரீட்சை நடாத்துவது தொடர்பாக விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியிட்டு கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**15. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு. / திருமதி / செல்வி .................................. என்பவரை நான் சொந்தமுறையில் நன்கு அறிவேன் எனவும் அவர் ................................. ஆந் திகதி என் முன்னே கையொப்பம் இட்டார் எனவும், உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தியுள்ளார் எனவும், அந்த பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் நன்றாக ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிபடுத்துபவரின் பெயர் :----.
பதவியும் உத்தியோக முத்திரையும் :----.

(இந்த உறுதிப்படுத்தலானது, அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரால்/ சமாதான நீதவான் ஒருவரால்/ சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவரால்/ முப்படை அதிகார வலுவுடைய அதிகாரி ஒருவரால்/ பொலிஸ் சேவையில் வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி ஒருவரால்/அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

**அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களுக்காக திணைக்கள தலைவரின் சிபாரிசு**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி........................ என்பவர் தற்போது ............................... எனும் அலுவலகத்தில்/ நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் எனவும், அவரின் சேவை திருப்திகரமாக உள்ளது எனவும் கடந்த வருடங்களில் சம்பள ஏற்றங்கள் அனைத்தையும் பெற்றுள்ளார் எனவும், அவர் எந்தவிதமானதொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் (கண்டிப்பு தவிர்ந்த) உட்படவில்லை எனவும், இந்த பரீட்சையின் பெறுபேறுகளுக்கு ஏற்ப, ஒரு பதவி வெற்றிடத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.............,
திணைக்கள/நிறுவனத்தின்
தலைவரின் கையொப்பம்.

பெயர்:----.
பதவி மற்றும் பதவி முத்திரை:----.
திகதி:----.

*4-609/2*